**செ. கு. எண்: 104** **நாள்: 26.04.2013**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 26.4.2013

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அபிஷேகபுரம் கிராமம் அருகில் 22.4.2013 அன்று சென்னையிலிருந்து மதுரை சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து, சாலை ஓரத்தில் நின்று கொண்டிருந்து லாரி மீது மோதியதில், பேருந்து நடத்துநர் தங்கவேல், பேருந்தில் பயணம் செய்த திரு. கணேசன் என்பவரின் மனைவி திருமதி செந்தில் ராணி, திரு. மோகன் என்பவரின் மனைவி திருமதி சரவணி ஆகியோர் சம்பவ இடத்திலேயும் மற்றும் திரு. கோவிந்தராஜ் என்பவரின் மனைவி திருமதி பூமாரி பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றியும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டம், கல்லாக்கோட்டை கிராமம் அருகே 22.4.2013 அன்று சென்று கொண்டிருந்த இரு சக்கர வாகனம் மீது அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த கல்லாக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. கோபால் என்பவரின் மகன் சௌந்தர்ராஜ், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த பேருந்து நடத்துநர் தங்கவேல், செந்தில்ராணி, சரவணி, பூமாரி மற்றும் சௌந்தர்ராஜ் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அபிஷேகபுரம் கிராமம் அருகில் 22.4.2013 அன்று சென்னையிலிருந்து மதுரை சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து, சாலை ஓரத்தில் நின்று கொண்டிருந்து லாரி மீது மோதியதில், பதினான்கு நபர்கள் காயமடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் இவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்த பேருந்து நடத்துநர் தங்கவேல், செந்தில்ராணி, சரவணி, பூமாரி மற்றும் சௌந்தர்ராஜ் ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயம் அடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**